உலகத் தமிழினமே எண்ணிப்பார் நீ
உறங்கினால் வரலாற்றில் யார் உன்னை மன்னிப்பார்

எங்கேனும் உனக்கென்றோர் அரசுண்டோ காட்டு
தமிழ் ஈழப்போர் கண்டேனும் மானத்தை நாட்டு 2

நாடுகள் அனைத்தும் நீ கூலியாய் நடந்தாய்
நாலுபேருக்கும் நீ கேலியாய் கிடந்தாய் 2
கேடுகள் சூழ நீ அலைகடல் கடந்தாய்
கேட்பார் இல்லாமல் நீ ஊர் ஊராய் மடிந்தாய் 2

உலகத் தமிழினமே எண்ணிப்பார் நீ
உறங்கினால் வரலாற்றில் யார் உன்னை மன்னிப்பார்

விடுதலை புலிகள் போர்க்களம் ஆடும் வேளை
விணாக தமிழ் மாந்தர் களிப்பதோ நாளை
எடு கையில் நீயும் போய் இன்றைக்கே வாளை 2
ஈழத்தின் வேங்கைக்கு கொடு வந்து தோளை 2

உலகத் தமிழினமே எண்ணிப்பார் நீ
உறங்கினால் வரலாற்றில் யார் உன்னை மன்னிப்பார்

வாழ்கின்ற நாடெல்லாம் உனது தாய் நாடா
வாடகை வீடென்ன உன் சொந்த வீடா 2
ஆழாமல் அலைகின்றாய் ஆடா நீ மாடா
அடிமையாய் இருக்கின்றாய் நீ கெட்ட கேடா 2

உலகத் தமிழினமே எண்ணிப்பார் நீ
உறங்கினால் வரலாற்றில் யார் உன்னை மன்னிப்பார்